ஊடக அறிவித்தல் இல. - 27

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020

## அஞ்சல் வாக்கு அடையாளமிடும் நாள்களும் தேர்தல் செயன்முறைக்குரிய நாள் குறித்தல்களும்

2020 பாராளுமன்றத் தேர்தலுக்குரிய அஞ்சல் வாக்கு அடையாளமிடுவதற்கான நாள்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும், அந்நாள்கள் பற்றிய உத்தியோகபூர்வ அறிவித்தலொன்று விடுக்கப்பட்டிருப்பதாகவும் சம்பிரதாய மற்றும் நவீன ஊடகங்கள் வாயிலாக பரப்பப்படும் செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இத்தேர்தலுக்குரிய பணிகள் மேற்கொள்ளப்படும் நாள்களைக் குறிப்பதற்கான எந்தவொரு தேர்தல் ஆணைக்குழுப் பத்திரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், அவ்வாறானதோர் ஆவணத்தைத் தயாரிக்கவும் இல்லை என விடயப்பொறுப்பு அலுவலர்களும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகமும் எனக்கு அறிவித்துள்ளனர்.

ஆகையால், எனது அல்லது உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவரின் ஊடக அறிவித்தலொன்றின் மூலம் உறுதிசெய்யப்படும் வரை இவ்வாறான நாள் குறித்தல்கள் பற்றிய செய்திகளைப் பரப்பாமல் இருக்குமாறு அனைத்து வெகுசன ஊடக நிறுவனங்களிடமும் ஊடகவியலாளர்களிடமும் தேர்தல் ஆணைக்குழு விநயமாகக் கேட்டுக் கொள்கின்றது.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.06.12

ஃ/-